## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2025-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண்.44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | அங்குச்சாமி | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**10.06.2025** **OS.No. 15/2022** **பி.வா.சா.1 ஆஜர்**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

வாதி பிராதில் எந்த புல எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண்.37/28 ஆகும். அந்த சொத்திற்கு என்ன நான்குமால் போட்டு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.37/28 -ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 10 சென்ட் ஆகும். மேற்படி 1 ஏக்கர் 10 சென்டில் 36 சென்ட்டை நான் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 36 சென்ட்டை எதன் அடிப்படையில் நான் மட்டும் கிரையம் கொடுத்தேன் என்றால் நான் என் அத்தையிடம் கிரையம் வாங்கியதன் அடிப்படையில் கொடுத்தேன். நான் எப்போது தாவா சொத்தை என் அத்தையிடம் கிரையம் வாங்கினேன் என்றால் வருடம் எனக்கு தெரியாது. என் அத்தையிடம் இருந்து எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் வாங்கினேன் என்றால் 36 சென்ட்டை கிரையம் வாங்கினேன். மேற்படி 36 சென்ட்டிற்கான நான்குமால் தெரியுமா என்றால் கிழக்கே தங்கமுத்து , மேற்கே பால்சாமி சேர்வை, வடக்கே கண்மாய் காளாங்கரை, தெற்கே அர்ஜீனன் நிலம் உள்ளது. சக்திவேல் தாவா சொத்தில் எந்தெந்த வருடம் என்ன அனுபவம் செய்து வந்தார் என்று என்றால் சக்திவேல் கிரையம் வாங்கிய பின் வெளிநாடு சென்று விட்டார். தாவா சொத்தை வாதி கிரையம் வாங்கி கலைவாணிக்கு கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கலைவாணி வெங்கடேசிற்கு கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை வாதி அர்ஜீனன் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam